"ராட்டின்வெற்றி," "சத்ரபதி சிவாசி"

முதலிய புத்தகங்களின்

ஆசிரியர்

## பி. வி. பிரபஞ்ச

இயற்றியது

PRINTED AT

THE NOBLE PRESS, TRIPLICANE

MADRAS.

---

*All Rights reserved.]* 1923 *[Price 2 As.*

# ஸ்ரீமத்வாசாரியர்

## ஜீவிய சரிதை.

---

### பரத கண்டம்.

'பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு' நாடு எனப் புகழப்பட்ட இந்த பரதகண்டம் என்னும் இந்தியா தேசத்தில் பல ஆயிர வருஷங்களாக ஹிந்து ஜனசமூகம் சன்மார்க்க நெறிதவறாமல், உத்தம, ஸாத்வீக, வாழ்க்கை வாழ்ந்து வந்ததற்குக் காரணமாகயிருந்தது எது? உலகாயுதராய், சரீர சுகத்திலும் சுயநலத்திலுமே பேராசை கொண்டு "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" எனும் கொள்கை யுடையவராகி, நிலையற்ற செல்வத்தைத் தேடுவதே தமது முக்கிய நோக்கமாகவும், பொறாமை, பகை முதலிய தீக்குணங்களுடனும் வாழாமல், கேவலம் அன்பே அஸ்திவாரமாகவும், பரோபகாரமே தமது தர்மமாகவுங்கொண்டு இந்திய ஜனங்கள் இல்லறம் நடாத்தியதற்குக் காரணமாக இருந்தது எது? ஸ்ருதி ஸ்மிருதிகள் தான்! இவைகளினின்றும் எப்பொழுதும் வற்றாத ஊற்றுபோல் சுரந்துவந்த சக்தியொன்று ஜனங்களுக்கு ஸாத்வீக வாழ்க்கையில் ஆவேசம் உண்டாக்கி வந்தது.

ஆனல் சிற்சில சமயங்களில் ஜனங்களின் புத்தியின்மையினுல் வேதங்களை அஸ்திவாரமாகவுடைய வேதாந்த மதத்திற்குச் சிதைவு நேரிட்டது. அப்பொழுது பெரிய மஹான்கள் சனுதன தர்மம் முற்றிலும் க்ஷீணமடையாமலிருக்க அவ்வக்காலங்களில் நிலவிவந்த கெடுதிகளைப் போக்குமாறு ஜனங

களுக்கு உபதேசித்தருளினர். அப்படிப்பட்ட மஹான்க ளில் ஸ்ரீ மத்வாசாரியார் ஒருவராவர்.

## ஸ்ரீ மத்வாசாரியார் திருவவதாரம் செய்தகாலத்தில் இத்தேசத்திய நிலைமை.

தேசமெங்கும் மாயாவாதம் * நிலவிவந்தது. நானே பிரம்மா 'அஹம் பிரம்மாஸ்மி' என்று அதன் உண்மைப் பொருளை யறியாமல் சொல்லுவாராயினர். உலகமெல் லாம் பொய், வெறும் மாயை, என்பதுதான் நம்பிக் கையாக யிருந்தது. இந்த இரண்டுவித எண்ணங்களும் ஒன்று மறியாத ஜனங்களுக்கு ஏற்பட்டு விட்டதனல் பலவித அனிபாயங்கள் உண்டாயின. ஜனங்களுக்குள் நீதிக்கேடும், துன்மார்க்கமும், கெட்ட நடத்தைகளும் அதிகமாயின. உல கமே பொய், அத்தகைய உலகத்தில் நானே கடவுள், என்று விபரீதமாக ஒருவனுக்குத் தோன்றிவிட்டால் அவன் என்ன தான் செய்யமாட்டான்.

தேச முழுவதும் நிலவிவந்த சமயம் அத்வைதமே அதை எதிர்த்துப் போர்செய்யக்கூடிய சமயம் வேறு வெளி வரவில்லை. பண்டிதர்களெல்லாம் கற்றது அத்வைத சித தாந்தமே; பெரிய அரசர்கள் ஆசிரியித்ததும் அதுவே, ஆனல் சில பெரியோர்களுக்கு இந்த மாயாவதத்தின் மீது சிறிது சிறிதாக சந்தேகமுண்டாகி வளர்ந்து வந்தது. ஜைன மதமும், பௌத்தமதமும் செழித்த இந்நாட்டில், யாகத்தில்

---

* ஸ்ரீமத் சங்கராச்சாரியார் உபதேசித்த சித்தாந்தத்திற்கு மாயா வாதம என்னும் பதம் பிரயோகப்படுத்தவில்லை. அவருக்குப் பின்னல் வேதாந்தத்தின் ஒரு அம்சத்தை மறந்து, மற்ெருரு அம்சத்தை மாத் திரம் அதி தீவிரமாக உபதேசித்துவந்த சித்தாந்தத்திற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

செய்யப்பட்ட ஜீவஹிம்சையும், சக்தியை வணங்குபவர்களால் செய்யப்பட்ட ஜீவஹிம்சையும் ஜனங்களின் மனதைக் கலைத்தன. ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் வித்யாசமே யில்லாத ஒன்றே யென்பதிலும், அந்த ஒன்றும் நிர்குணமான தென்பதும், எல்லாம் மாயையென்பதும், அறிவுள்ளவர்களின் மனநிம்மதியைக் கெடுத்தன. பொதுவில் அத்வைத மதம் புத்தியையும் ஞானத்தையும் பற்றியதாக விருந்ததேயொழிய மானிடவாழ்க்கையைப் பற்றியதாக விருக்கவில்லை. சமயம் (Religion) என்பது வாழ்க்கையே. சமயமென்பதுஞானதை மாத்திரம் பற்றியதல்ல. எண்ணத்தை மாத்திரம் பற்றிய தல்ல. நாம் உலகில் வாழும் வாழ்க்கையையே அதிகமாகப் பற்றி நிற்பது. மனிதன் தன் பொறிகளை அடக்கி நன்னெறி யின்படி வாழ்ந்து மேலான நிலைமையை யடையவே சமயம் அல்லது மதம் சாதகமாகின்றது. உயிர்கள் மேலும் மேலும் சாத்வீகமான உயர்ந்த நிலைமையையடைவதற்கு, ஜீவாத்மாக் களின் முயற்சியும், கர்மங்களுமே உதவி செய்கின்றன. ஒவ் வொரு உயிரும் தான்செய்யும்முயற்சி, நல்லகர்மம். முதலிய வைகளுக்குத் தகுந்தபடி, பல ஜன்மங்கள் தாங்கி உயர்ந்த நிலையில் பரிணமிக்கின்றது. ஆகையால்தான் உலகில் பல வேறு நிலைமைகள் காணக்கிடக்கின்றன. உயிர்களுள் நாம் பார்க்கும் பலவித வித்தியாசங்களுக்குக் காரணமென்ன? இதற்கெல்லாம் ஜீவஈச்வரபேதம்தான் விடைதரவல்லது. இத னால் இரண்டும் சம்மந்தமேயில்லாத வெவ்வேறானவையென நினைக்கக்கூடாது.

## பரசுராம க்ஷேத்திரம்.

பொதுவாக பரசுராம க்ஷேத்திரம் என்று சொல்லப் பட்ட இந்தியாவின் மேற்குக் கரையில் வெறும் அத்வைதத்

தில் திருப்தி உண்டாகாமலிருந்த பல பண்டிதர்கள் வாழ்ந்து வந்தனர். இங்கே ஸ்ரீராமானுஜர் விசிஷ்டாத்வைதம்கூட அவ்வளவாகச் செழிக்கவில்லை. பரம்பரையாக வழக்கம் பேரில் கொள்கைளில் எல்லாரும் அத்வைதிகளானாலும், 'பாகவத சம்பிரதாயம்' என்னும் ஒரு சம்பிரதாயத்தைத் தழுவின ஜனங்களே இங்கே அதிகம் இதைச் சேர்ந்தவர்களெல்லோரும் பக்தியில் சிறந்தவராய் சிவன், விஷ்ணு இருவரையும் சமமாக பாவித்துக் கடவுளை வழிபட்டனர்.

## மத்யகேஹபட்டர்

இந்தப் பாகவத சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஒரு பிராம்மணோத்தமர் உடுப்பியினருகில் பாஜக க்ஷேத்திரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் பெயர் மத்யகேஹபட்டர். அத்வைத மதத்தில் அதிக பற்று இவருக்கு இருக்கவில்லை.

இவருக்குப் பலவருஷங்களாக புத்திர சந்ததியே யில்லாமையினால் அநந்தேசுவரரை வேண்டிக் கொண்டார். ஒருநாள் கோயிலில் ஒருவர் தன்மீது ஆவேசம் வந்தபோது, வாயு அவதாரம் செய்து மதவிஷயமாகச் சீர்திருத்தம் செய்வதாகக் கூறினார்.

## ஸ்ரீமத்வர் திருவவதாரமும் குழந்தைப் பருவமும்.

சிலகாலம் செல்லவே மத்யகேஹருக்கு விஜயதசமியன்று ஒரு புத்திரன் பிறந்தான். பன்னிரண்டு வருஷம் கடவுளை வேண்டி சேவை செய்ததன் பலனைத் தனக்குப் பிறந்த புத்திரனுக்குச் சகல சடங்குகளுடனும் நாமக்கரணம் செய்தார். குழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஒருநாள் குழந்தையை உடுப்பி அநந்தேசுவரர் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போய், பூஜை முதலி

லியவைகள் முடித்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்ட போது மாலை நேரமாய் விட்டது. வழியோ காடு; பிலவித பைசாசங்கள் வழியில் காடுகளி லிருந்தனவாம். நடுக்காட்டில் மத்யகேஹரும் மற்றேரும் வந்தபோது இரவாய் விட்டது. அந்தக் கானகத்திலிருந்த துர்தேவதையொன்று அக் குழந்தை அவதார புருஷனுக இருப்பதால் தான் சும்மா விட்டு விட்டதாகச் சொல்லிற்றும். இதைக்கேட்ட பெற் ருர்களும் மற்றேரும் ஆச்சரிய மடைந்தனர்.

குழந்தை முப்பத்திரண்டு சாமுத்ரிகாலக்ஷணங்களுட னும் அழகிய வடிவுடன் வளர்ந்தது. சிறுவயதிலும் அசாத் திய பலமும், தைரியமும், தேகாரோக்கியமும் இச்சிறு குழந்தை பெற்றிருந்தான். ஒரு சமயம் மாடுகளுக்கென தயார் செய்து வைத்திருந்த கொள்ளு முழுமையும் குழந்தை தின்றுவிட்டதாம். மற்றொரு சமயம் ஒரு எருதின் வாலைப் பிடித்துக் கொண்டு காடு முழுமையும் பயமின்றிச் சுற்றி விட்டு வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

நடப்பதற்கு முன்னமேயே இவ்விதமான அசாதாரண செய்கைகளைச் செய்த வாசுதேவன் நடக்க ஆரம்பித்த உடனே ஊரெங்கும் சுற்ற ஆரம்பித்து விட்டான். ஒருநாள் மத்யகேஹருக்குக் கடன் கொடுத்த ஒருவன் பணத்தை திருப்பித் தருமாறு அவரைக் கேட்டான். அவர் அப்போது கடன் பைசல் செய்யாததனுல் அவர் வீட்டு வாசலிலேயே உட்கார்ந்து விட்டான். அவன் பணம் கிடைக்கும்வரையில் உணவு வேண்டியதில்லை யென்று தாரணம் உட்கார்ந்து விட்ட தனுல் மத்யகேஹர் அதிக வருத்தமடைந்து தானும் உண் ணுமல் சும்மாயிருந்தார். இதை வாசுதேவன் அறிந்து கடன் காரனை விளையாட்டாக ஒரு பக்கம் அழைத்துச் சென்று, அவன் கையில் அங்கே கீழே கிடந்த சில புளியாங்கொட்டை

களைப் பொறுக்கிக் கொடுக்கவே, கடன்காரன் பார்க்கவும் அவைகள் தனக்குச் சேரவேண்டிய தொகையாக இருக்கக் கண்டு ஆச்சரியப் பட்டான். உடனே கடன்காரன் மதயகே ஹரிடஞ் சென்று தனக்குக் கடன் கொடுத்தாய் விட்டதெனச் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

ஸ்ரீமத்வர் சிறுவயதிலும், இம்மாதிரி பல சமயங்களில் சாதாரண மனிதப்பிறவியில் பிறந்தவர்களால் செய்யமுடியாத காரியங்களைச் செய்திருப்பது சிலர் நம்புவதில்லை. சாமானிய மாக எல்லா ஆசாரியர் சரித்திரத்திலும், நாயனர், ஆழ்வாராதி கள் சரித்திரங்களிலும் இம்மாதிரி விசிதர விஷயங்கள் நடை பெற்றனவென்று வாசிக்கின்றோம். ஜனஙகளும் அவைகளெல் லாம் உண்மையென நம்புகின்றார்கள். இதேமாதிரி மற்ற மதா சாரியர் வாழ்க்கையிலும் சில விஷயங்கள் நடநததாகச்சொல் லப்படுகின்றது. அவர்களெல்லாம் அவைகளை உண்மையென நம்பும்போது, நாம் ஏன் ஸ்ரீமத்வர் சில விஷயங்களில் அசாத் தியமான காரியம் செய்ததாகக் கேள்விபபடும்போது சநதே கப்படவேண்டும்?

நிற்க, வாசுதேவன் குழநதையாக இருந்தபோது மற் றொரு விசித்திரமான சம்பவம் நடநதது. மத்யகேஹரும், அவர் மனைவி வேதவதியும், குடும்பததுடன் நேயாம்பள்ளி, நெடியூர் முதலிய கிராமங்களில் வசித்த தமது பந்துக்களின் வீட்டிற்கு விசேஷகாலங்களில் போய்வருவது வழக்கம்.

ஒரு சமயம், இவர் தம் மனைவி மக்களுடன் நெடியூருக் குச் சென்றார். அங்கே எல்லாரும் ஏதோ வேலையில் கவனஞ் செலுததிக் கொண்டிருக்கையில், வாசுதேவன் மெதுவாக வீட்டைவிட்டுக் கிளம்பி வெளியேபோய்விட்டான். ஊரைச் சுற்றி ஒரு பெருங்காடு; அதன் தேவதைக்கு கானகதேவதை

எனப் பெயர். கானக தேவதையின் கோயிலடைந்து மூலஸ்தானம் சென்று, வணங்கிவிட்டு, அதைவிட்டு உடுப்பிக்குத் தனியாகவே சென்று சந்திரமௌளீசுரர் கோயிலையடைந்து, அவரையும் வணங்கி, பிறகு அனந்தீசுவரர் தேவாலயம் சென்முன். அப்பொழுது அச்சிறுகுழந்தைக்கு வயது மூன்றுதான். விருந்திலும் கேளிக்கையிலும் கவனஞ் செலுத்திய பிதா, சிறிதுநேரங் கழித்து, சிறுவனைக்காணுமல் தேடினூர். வீட்டில் வாசுதேவன் காணப்படவில்லை. உடனே எல்லாரும் குழந்தையைத்தேட ஆரம்பித்தனர். அவன் அங்கிருந்தாலல்லவோ அகப்படுவான்! விருந்திலிருந்த உற்சாகமெல்லாம் போய் மத்யகேஹர் விசாரத்துடன் இங்குமங்கும் பைத்தியம் பிடித்தவரைப்போல அலைந்தார். கடைசியில் யாரோ ஒருவர் உடுப்பியில் வாசுதேவனை அநந்தேசுவரர் தேவலாயத்தினின்றும் வருவதைக்கண்டார். உடனே அவனைப்போய் பிடித்துக்கொண்டு "எங்கேய்டாபோய்விட்டாய்? உன்னையார் இங்கேயெல்லாம் அழைத்துவந்தது?" என்று கேட்கவே, சிறு பாலகன், 'சங்கரநாராயணர்தான் என்னை எல்லாவிடததிற்கும் அழைத்துச் சென்றது' என்று உடனே பதில் சொன்னுன். குழந்தையின் முகத்தில் பயமென்பதே காணப்படவில்லை. எப்பொழுதும்போல மந்தஹாஸமுகத்துடன் புதிதாக மலர்ந்த ஒரு அழகிய புஷ்பமென மிகவும் சௌந்தர்ய வடிவுடன் காணப்பட்டான்.

## அக்ஷராப்பியாஸம்.

ஷேடியூரிலிருந்து திரும்பிவந்த, சிலகாலத்திற்குள் வாசுதேவனுக்கு அக்ஷராப்பியாஸம் செய்வித்தார். வாசுதேவன் மிகுந்த அவாவுடன் தகப்பனூரிடமிருந்து கல்விகற்றுக்கொள்ள ஆரம்பித்தான். சிறுவன் ஆத்திரத்தையும், புத்திகூர்மையை

யுங்கண்ட தகப்பனுர், திருஷ்டிதோஷம் உண்டாய்விடுமென்று பயந்து பையனை ஒரு தனி இடத்திற்கு அழைத்துச்சென்று கல்விபோதித்தார். சிறுவன் எவ்வளவு புத்தி கூர்மையுடன் விளங்கினுனென்பது பின்னுல் தெரியவரும்.

ஒரு சமயம் நேயாம்பள்ளியில் வாசுதேவனும் அவன் தாயாரும் புராணம் கேட்கச்சென்றனர். சிவரா என்னும் அந்தணன் புராணத்தில் வியாக்கியானம் செய்துகொண்டிருந்த போது ஒரு தகுந்த ஸம்ஸ்கிருதபதம் பிரயோகிக்கத் தெரியாமல் தயங்க, உடனே மிகவும் கவனத்துடன் புராணத்தைக் கேட்டுக் கொண்டிருந்த வாசுதேவன் தகுந்த பதத்தைச் சொல்லி உதவினுன். வயதில் பெரியோர்களெல்லாம் யோசிக்கு முன்னமேயே, ஒருபெரிய பண்டிதருக்குத் தகுந்த பதம் பொருக்கிக்கொடுத்த வாசுதேவன் புத்திகூர்மையை என்னென்று சொல்வது!

மற்றொருசமயத்தில் இதேமாதிரி ஒரு சம்பவம் நடைபெற்றது. தன் தகப்பனுர் ஒருநாள் புராணத்தில் ஒரு சுலோகத்தை வியாக்கியான மூலமாக விளக்கிக்கொண்டிருந்தார். ஒரு முக்கியமான வார்த்தையின் பொருளைச் சொல்லாமல் விட்டுவிட்டார். உடனே வாசுதேவன் பணிவுடன் அவருக்கு அந்த விஷயத்தை எடுத்துக்காட்டி அதன் பொருளையுங்கூறினுர். இதனுல் வாசுதேவன் சிறுவயதில்கூட எவ்வளவு புத்திசாலியாக விருந்தானென்பது தெரிகின்றது.

## உபநயனம்.

வாசுதேவன் ஐந்துவயது முடியுமுன்னரே கல்வியில் காட்டிய திறமையைக்கண்டு எல்லோரும் இச்சிறுகுழந்தைக்கு எவ்வாறு இவ்வளவு கல்விஞானம் உண்டாயிற்றென வியந்த

னர். உபநயனம் செய்துவிட்டால், மதகிரந்தங்களையும் இன்னும் சில மேலான விஷயங்களையும் கற்றுக்கொள்ள சாதகமாயிருக்குமென்றெண்ணி மத்யகேஹா் குழந்தைக்கு உபநயனம் செய்யத் தீர்மானித்துவிட்டார் சீக்கிரத்திலேயே வாசுதேவனுக்கு உபநயனம் செய்தார்கள். சிறு வயதிலேயே தன்னுடைய தைரியத்தையும் சக்தியையும் காண்பிக்கலானான். உபநயனமானதும், சிலகாலத்திற்குள் வாசுதேவன் ஒருபெரிய ஸர்ப்பத்தை வதைசெய்தான். மணிமான் என்றும் அஸுரனே பாம்பின் ரூபமுடன் காட்டில் சஞ்சரித்ததாகவும், வாசுதேவனைக் கண்டவுடனே அது அவன்மீது சீரிக்கொண்டு வரவே, வாசுதேவன் மகா தைரியத்துடன் எதிர்த்து நின்று, தனது கால் விரலால் ஸர்ப்பத்தின் தலையை நசுக்கிவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இந்த சங்கதியைக்கேட்ட ஜனங்கள் ஆச்சரியமடைந்தனர். மிகவும் பிரம்மாண்டமான ஸர்ப்பம் சிறு குழந்தையால் கொல்லப்பட்டது ஆச்சரியமாகவிருந்தது.

அன்று சிறுவன் வீட்டிற்கு வர நேரமாய்விட்டது. தாயார் தன் அருமைக் குழந்தைவராமல் போகவே, மனம் வருந்தி வாசுதேவா!வாசுதேவா! எனக் கூப்பிட்டாள். உடனே வெகு தூரத்திலிருந்த வாசுதேவன் ஒரே அடியில் தன் தாயாரிடம் தாண்டிச்சென்றார்.

சிறுவன் ஒரு குருவினிடம் சென்று வாசிக்க ஆரம்பித்தான். தேகபலமும், திடகாத்திரமும், அழகும் ஒருங்கே பெற்ற வாசுதேவன் விளையாட்டில் முதன்மை பெற்றான். அவன் பலத்தைக்கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தார்கள். பாடங்களை நன்றாக வாசிப்பான். இவன் புத்தி கூர்மையைக் கண்ட உபாத்தியாயர் சந்தோஷப்பட்டனர்.

ஒருநாள் தன் குருவின் புதல்வன் தலைவலியால் கஷ்டப் படுவதைப்பார்க்கச் சகியாமல் வாசுதேவன் அவனை அருகி லழைத்து காதில் ஊதினான். உடனே பலவருஷங்களாக உபத்திரவப்படுத்திவந்த தலைவலி மாயமாய்விட்டது.

## வாசுதேவன் சன்னியாசியாதல்.

வாசிப்பு முடிவுபெறவே தன் குருவின் விடைபெற்று வாசுதேவன் வீடு சென்றான். மத்யகேஹார் மகனுக்குக்கலி யாணஞ் செய்ய வேண்டுமென்றும், தன் வம்சத்தை விருத்தி செய்யப் பேரப்பிள்ளைகள் பிறக்கவேண்டுமென்றும் ஆசை கொண்டார். ஆனால் வாசுதேவன் மனம் உலகவாழ்க்கையில் செல்லவில்லை. தான் வந்த காரியத்தை உடனே முடித்து விட்டுச் செல்லுவது அவர் நோக்கம். உலகில் பரவிவந்த பொய் நம்பிக்கையை ஒழித்து, உண்மையை நிலைநிறுத்துவதே அவர் நோக்கம். ஆகையால் சந்நியாசம் வாங்கிக் கொள்ள அவர் ஆசை கொண்டு இரகசியமாய் அச்சுதப் பிரேக்ஷரை யடைந்து அவர்சிஷ்யராக அமர்ந்தார்.

தன்னருமைப் புதல்வன் காணாமல் போகவே மத்யகே ஹார் அதிக வருத்தமுடன் தேடி உடுப்பியில் அச்சுதப்பிரே க்ஷர் மடத்தில் வாசுதேவர் இருப்பதாக அறிந்து அங்கே சென்றார். தகப்பனாருக்கும், புத்திரனுக்கும் பிறகு வாக்கு வாதம் நடந்தது. ஒரேபிடியாக வாசுதேவர் சன்னியாஸமே தன் மனதிற்குகந்ததெனச் சொல்லிவிட்டார். மத்யகேஹார் மனமுடைந்து இல்லஞ் சென்றார்.

வீட்டிற்குச் சென்று தன் பத்னியினிடம் சங்கதியைச் சொன்னார். இருவரும் மகன் பிறிவாற்றாது அடைந்த வருத் தம் எவ்வாறு சொல்லமுடியும்! மறுபடியும் மத்யகேஹார் புறப் பட்டுத் தன் புதல்வனை வீட்டிற்கு வரவேண்டுமென வேண்

டினர்; சன்னியாசம் கூடாதென்று சொன்னார். வாசுதேவர் மனம் மாறவில்லை. வயது சென்றதாய் தந்தையை உதவியின்றி விட்டுவிடுதல் நியாயமாவெனத் தன்புதல்வனைக் கேட்டார் மதயகேஹர். வாசுதேவர் மனம் இளகியது. தனக்கு ஒரு சகோதரன் பிறக்கும் வரையில் தான் சன்னியாசங் கொள்ளுவதில்லை என்று தகபபனருக்கு வாக்களித்தார். தகப்பனரும் வேறு வழியின்றி ஊருக்குத் திரும்பிச் சென்றார்.

சின்னட்களுக்குள் மத்யகேஹருக்கு ஒரு புத்திரன் பிறநதான். உடனே வாசுதேவர் ஊருக்குச் சென்று தன் தாய் தகப்பன் இருவர்களுடைய சம்மதமும் பெற்று தன் குருவை யடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது பன்னிரெண்டே. பூர்ணபிரக்ஞர் என்னும் பெயருடன் துறவரம் பூண்டார்.

## தத்வ வாதத்தில் திறமை.

பண்டை நாட்களில் இராஜாக்களும், மற்ற ஜமீன்தாரர்களும் தமது தர்பார் காலங்களில் கற்றோர்களை சன்மானம் செய்வது வழக்கம். பலவித சாஸ்திரங்களில் ஞானமுள்ளவர்கள் வாக்குவாதம் செய்வார்: ஜயித்தவர்களுக்கு மரியாதை செய்வது வழக்கம். பெரிய இராஜாக்கள் செய்வதைப்போல தேசத்திலுள்ள பல தனவங்வர்களும் கற்றோரை ஆதரித்து வந்தனர். எஙகே கண்டாலும் பண்டிதர்கள் ஸபாக்களும், வாக்குவாதமுநதான். நியாய, வைசேஷிக சாஸ்திர பண்டிதர்கள் எல்லோரினும் சிறநது கீர்ததியுடன் விளஙகிவநதனர்; இந்த சாஸ்திரப்படி வாதம் செய்பவர்களை வெல்லுவது அசாததியம், வாக்சாதுர்யத்திலும் தர்க்கம் செய்யும் தந்திரத்திலும் மிக்க இவர்கள் எப்படியாவது எதிரிகளை தோற்கடிததுவிடுவார்கள்.

இப்படிப்பட்ட பண்டிதர்களில் ஒருவர் உடுப்பிக்கு வர நேர்நதது. அவர் அச்சுதப் பிரேக்ஷர் மடததிற்கு

வரவே அங்கே ஒரு சபை கூடியது. ஸ்ரீமத்வரும் அச்சுதப் பிரேக்ஷரும், மற்ற பண்டிதரும் குழுமியிருந்த அச்சபையில் புதிதாக வந்தவர் மிகுந்த சாதுர்யமாகவும் வியக்கத்தக்க விதமாகவும் மூன்று நாள் ஏதோ முக்கிய விஷயமொன்றைப் பற்றி பிரசங்கஞ் செய்தார். அவர் முடித்ததும் ஸ்ரீமத்வர் ஆரம்பித்து பண்டிதர் சொன்ன விஷயங்களுக்கெல்லாம் தகுந்த விதமாக விடையளித்து அவரைத் தோற்கடித்தார். ஸ்ரீமத்வர் தர்க்க, வியாகரண சாஸ்திரங்களில் காட்டியஞானத்தையறிந்த அச்சுதப் பிரேக்ஷர் ஆச்சரிய . மடைந்தவராகி, உடனே தனது சிஷ்யனுக்கு அத்வைத சாஸ்திரங்களை உபதேசிக்க ஆரம்பித்தார். முதலில் இஷ்டசித்தி என்பது ஆரம்பிக்கப்பட்டது. குரு சொன்னவைகளை யெல்லாம் பொருமையுடன் கேட்டுவிட்டுப் பிறகு அவர் முடித்தவுடனே இஷ்டசித்தியில் தனக்குத் தென்பட்ட பல தப்பிதங்களை எடுத்துக் காட்டி அப்படிப்பட்ட கிரந்தங்களை வாசிப்பதில் உபயோகமென்னவெனத் தன் குருவைக் கேட்டார்.

குரு தன் சிஷ்யன் சொல்லும் விஷயங்களுக்கு பதில் சொல்ல மாட்டாது தவித்தார். ஸ்ரீமத்வர் சொன்னதெல்லாம் அவருக்குச் சரியெனப் பட்டது. ஆனால் அவர் தொன்று தொட்டு எவராலும் உண்மையென எண்ணப்பட்டு வந்தவைகளை எவ்வாறு திடீரென்று உபயோகமற்றவையென தள்ள முடியும்? சம்பிரதாயமும், வழக்கமும், பொய் நம்பிக்கையும் மனிதனைப் புதுவழிகளில் செல்லாமல், பிடித்துக்கட்டி உயிரற்ற, உணர்வற்ற, மரங்களாகச் செய்வது சகஜமல்லவா?

ஸ்ரீ மத்வரைப் பார்த்தவர்களெல்லோரும் 'எவ்வாறு இச் சிறுவயதில் இவ்வளவு கல்வி இவர் கற்றார்.' என ஆச்சரிய மடைந்தனர். தன்னை இதைப்பற்றிக் கேட்டவர்களிடம் ஸ்ரீ மத்வர், 'இந்த ஜன்மத்திலா நான் இவைகளைக்

கற்றேன். எல்லாம் முன் ஜன்மங்களில் கற்ற விஷயங்களை என்று சொல்லுவது வழக்கமாம்.

உடுப்பியைச் சுற்றி அருகிலிருந்த பிரதேசத்தில் ஸ்ரீ மத்வருடைய பிரக்யாதி பரவியது. பல இடங்களிலிருந்து கல்வியில் மிக்கோர் வர ஆரம்பித்தனர். பல ஜனங்கள் இவருடைய வியாக்யானங்களைக் கேட்க அவாவுடன் வருவாராயினர். வந்தவர்களுக் கெல்லாம் இம்மகான் பக்திமார்க்கத்தைப் பற்றி உபதேசஞ்செய்ய ஆரம்பித்தனர். சொல்லுவதி லெல்லாம் த்வைதத்தின் கொள்கைகள் அடங்கியிருந்தன.

## ஸ்ரீமத் ஆனந்த தீர்த்தர்.

ஸ்ரீமத்வர் க்யாதி பரவவே, அச்சுதப் பிரேக்ஷர் அவருக்கு ஆனந்த தீர்த்தரென நாமஞ்சூட்டி அவரைத் தனியாக ஒரு மடத்தின் தலைவராக ஏற்படுத்தினர். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட பல பெரியோர் ஸ்ரீ மத்வரைக்காண வருவாராயினர். அவ்விதமாக வந்தவர்களில் பலர் இவருடன் வாக்குவாதம் செய்வார். பிறகு ஸ்ரீமத்வர் சொல்லுவதை அறிந்து அவரைப் பணிந்து, அவரது கல்வியையும் ஞானத்தையுங் கண்டு ஆச்சரியப் பட்டவராகி திரும்பிப் போய்விடுவார்கள்.

ஒரு காலத்தில் புத்தசாகரர் என்னும் சன்னியாசி ஒருவர் வாதிசிம்ஹனென்னும் பெயர்பூண்ட தர்க்கசாஸ்திரி ஒருவருடன் உடுப்பிக்கு வந்தார். இவ்விருவரும் ஸ்ரீ மத்வருக்குத் தமது சாஸ்திர விர்பத்தியைக்காட்ட எண்ணி அவருடன் வாக்குவாதம் செய்தனர். முதலில் வாதிசிம்ஹன் தன்னாலியன்றவரையில் பிரயத்தினப் பட்டார். பிறகு புத்தசாகரரும் வாக்குவாதத்தில் சேர்ந்துக்கொண்டார். ஆனாலும் ஸ்ரீ மத்வர் மிகுந்த கம்பீரமாகவும், சாந்தமுடனும் இவர்களுடைய கேள்விகளுக்குப் பதில்சொல்லி, அவர் சொன்ன விஷ

யங்களிலிருந்த பிழைகளை எடுத்துக்காட்டினார். பதில் சொல்லத் தெரியாமல் இவர்கள் நகைத்தனர். மறுநாளும் வாக்குவாதம் நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அன்றைபதினம் தாம் தோல்வியடைந்ததாக ஒப்புக்கொள்ளவே, ஸ்ரீ மத்வர் மறுநாளும் தான் வாதம்செய்யத் தயாரென்பதைத் தெரிவித்தார். ஆனால் இந்த இரண்டு பண்டிதர்களும் இரவிலேயே சொல்லாமல், தோல்விக்கு பயந்து ஓடிப்போய் விட்டனர். மிகவும் முக்கியமான இந்த வாக்குவாதம் இவ்வாறு முடிவடைந்தது.

## ஜனங்களின் மனோநிலை.

இவ்விதமாகப் பல பண்டிதர்கள் தோல்வியடைந்து ஸ்ரீ மதவர் சொல்வதை நியாயமென ஒப்புக்கொண்டு போவதைப் பார்த்த ஜனங்களுக்கு மனதில் ஒரு புதிய நிகழ்ச்சி உண்டாயிற்று. இதுவரையில், வழக்கத்திலிருக்கும் எதுவும் சரியானது என்னும் எண்ணம் நிலவிவந்தது. இப்போது சம்பிரதாயத்தி லிருந்தாலும் சில விஷயங்கள் தப்பிதமாக இருக்கமுடியும் என்னும் எண்ணம் உதித்தது. பொதுவில் அத்வைத சித்தாந்தத்தில் மனம் பற்றுமலும், அதன் தத்துவம் சரியாக அறியாமலுமிருந்த ஜனங்கள் ஸ்ரீ மத்வர் கிளப்பி வந்த சந்தேகங்களை ஏகமனதுடன் ஆமோதித்து வந்தனர். ஸ்ரீ சங்கரர் பாஷ்யத்தில் தனக்குண்டான சம்சயங்களையும், பிரம்ம சூத்திரத்தின் பொருள் அக்காலத்தில் பண்டிதர்களால் சொல்லப்பட்டபடி யல்லவென்பதும் ஸ்ரீ மத்வர் பயமின்றி உரைத்தார். அச்சுதப்பிரேக்ஷருடன் அடிக்கடி வாதம் செய்தார். அவர் பதில்சொல்ல முடியாமல் சுலபமாகத் தப்பு கண்டுபிடிக்கலாம், நீ ஒரு பாஷ்யம் எழுது பார்க்கலாம், எனக் கூறினார். ஸ்ரீ மத்வரும் பிரம்ம சூத்திரத்தின் பாஷ்யம் எழுத ஆவல் கொண்டார்.

## தேசசஞ்சாரம்.

மிகவும் சிறு பிராயத்தினராயினும் ஸ்ரீமத்வர், தான் ஒரு மடத்தின் தலைவரானவுடனே தேசசஞ்சாரம் செய்யுமெண்ணங்கொண்டுத் தன்குருவை யடைந்து விடை கேட்டார். அச்சுதப்பிரேக்ஷர் சம்மதிக்கவில்லை. பிறகு அவர் தென்னிந்தியாவில் பிரயாணஞ்செய்ய அனுமதி கொடுத்தார்.

முதலில் விஷ்ணுமங்கலத்தில் சிலகாலம் தங்கினார். அவ்வூரில் ஒருநாள் ஸ்ரீமத்வர் போஜனம் முடித்து உட்கார்ந்திருக்கையில், சுமார் 200 வாழைப்பழங்களை அவர் முன்கொண்டு வைத்துப் புசிக்குமாறு பக்தரொருவர் வேண்டிக்கொண்டார். அவரும் சிறிதுகூட சிரமமின்றி எல்லாப் பழங்களையும் தின்றுவிட்டு சகஜமாகவே இருப்பதைப்பார்த்த ஜனங்கள் அதிக ஆச்சரியமடைந்தனர்.

## முக்கியமான சந்திப்பு.

விஷ்ணுமங்கலத்தினின்றும் யாத்திரை செய்துக்கொண்டே ஸ்ரீமத்வர் திருவனந்தபுரம் என்று சொல்லப்படும் அநந்தசயனம் வந்துசேர்ந்தார். அச்சமயத்தில் அந்நகரில் சிருங்கேரி மடத்து வித்யாசங்கரர் தங்கியிருந்தார். ஸ்ரீமத்வரும், வித்யாசங்கரரும், சந்தித்தனர். ஸ்ரீமத்வர் ஸ்ரீசங்கர பாஷ்யத்தையும், அத்வைதத்தையும் எதிர்த்துப் போர்புரிவதையறிந்த வித்யா சங்கரர் மத்வர்மீது அதிக விரோதம்பாராட்டினார். எல்லாராலும் மதிக்கப்பட்டு வந்த அத்வைத சித்தாந்தத்தைக் குறைகூறுவது மதியீனமென்று வித்யாசங்கரர் எண்ணினார். ஆனால் இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தில் ஸ்ரீமத்வரை ஜயிக்க அவரால் முடியவில்லை. கண்டபடி ஸ்ரீமத்வரை தூஷிக்க ஆரம்பித்தனர். உலகில் இது வழக்கந்தான். கடைசியில் சாமர்த்தியமிருந்தால் ஸ்ரீமத்வரை ஒரு பாஷ்யம் எழு

தச் சொன்னார். ஸ்ரீமத்வரும் பிரம்மசூத்திரத்திற்குத் தான் ஒரு பாஷ்ய மெழுதுவதாகச் சொன்னார்.

இந்த வாக்குவாதத்தின் பிறகு இருவரும் பிரிந்தனர். ஆனால் சில காலங்கழித்து ராமேஸ்வரத்தில் மறுபடியும் இருவரும் சந்தித்தனர். ஸ்ரீமத்வர் அங்கே நடந்த வாக்குவாதத்திலும் ஜயமடைந்ததனால் வித்யாசங்கரர் தன்மனதில் பொங்கியெழுந்த சினத்தையடக்கிக்கொண்டு பேசாமல் போய்விட்டார்.

அப்பொழுது ஆஷாடமாதம். ஸ்ரீமத்வர் சாதுர்மாசத்திற்கு அவ்விடத்திலேயே தங்குவதெனத் தீர்மானித்தனர். தன்னாலானவரையில் ஸ்ரீமத்வருக்கு இடையூறுவிளைவிக்க சிருங்கேரி மடாதிபதி பிரயத்தினம் செய்தனர்; ஆனால் ஸ்ரீமத்வர் பொறுமையுடன் தன் காரியத்திலேயே கண்ணாயிருந்ததனால் வித்யாசங்கரரால் ஒருவித இடையூறும் செய்ய முடியவில்லை.

சாதுர்மாசவிருதம் கழிந்ததும் ஸ்ரீமத்வர் புறப்பட்டு வடக்குத் திசையாக யாத்திரைசெய்ய ஆரம்பித்தார். பாண்டிநாடு, சோழநாடு முதலியவைகளைக் கடந்து, சந்திரகிரி யாற்றின் கரையையடைந்தார். இவர் ஸ்ரீரங்கம் முதலிய க்ஷேத்திரங்களில் தங்கி ஸ்ரீரங்கனாதரை வணங்கி, ஸ்ரீமுஷ்ணம் வந்து சேர்ந்தார். ஸ்ரீமுஷ்ணத்தில் தண்டதீர்த்த மென்னும் ஒரு சிறு தீர்த்தமொன்று இருக்கிறது. ஸ்ரீமத்வரே அதை உண்டாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

சந்திரகிரியாற்றின் கரையிலுள்ள ஒரு தேவஸ்தானத்தில் ஸ்ரீமத்வர் ஒருநாள் ஐதரேய உபநிஷத்தின் வியாக்கியானம் செய்தபோது, வேதவாக்கியங்களுக்கெல்லாம் மூன்று பொருள் உண்டென்றும் மஹாபாரத ஸ்லோகங்களுக்கு பல

பொருள்களுண்டென்றும், விஷ்ணு ஸஹஸ்ரநாமங்களில் ஒவ்வொன்றிற்கும் நூறுபொருள்களுண்டென்றும் உறைத்தார். அங்கிருந்தவர்களில் சிலர் ஸஹஸ்ரநாமங்களின் நூறுபொருள்களை விளக்குமாறு கேட்க, ஸ்ரீமத்வர் ஆரம்பித்து மிகுந்த சாவதானமாகவும் தைரியமாகவும் சொல்லலானார். ஆனால் கேட்டவர்கள் சிறிது நேரங்கழித்து, ஆச்சரியமடைந்து, 'போதும் போதும்,எங்களுக்கு விளங்கவில்லை' என வேண்டிக் கொள்ள, ஸ்ரீமத்வரும் நிறுத்திவிட்டார். இப்படிச்சில காலம் யாத்திரை செய்துவிட்டு மறுபடியும் உடுப்பிக்குச் சென்றார். தென்னிந்தியா முழுவதும் பிரயாணஞ்செய்ததின் பலனாக ஜனங்கள் மனதில் ஒரு புது உணர்ச்சி உண்டாயிற்று. சங்கர மதத்தில் தமக்கிருந்த சந்தேகங்களை பயத்துடன் சொல்லி வந்ததெல்லாம் போய், தைரியமாக ஜனங்கள் பக்திமார்க்கத்தில் மனத்தைச் செலுத்தலாயினர்.

வித்யா சங்கரர் புதிதாக மாயாவாதத்திற்கு ஏற்பட்ட சத்துருவை எப்படியாவது அடக்கவும், நீக்கவும் பிரயத்தனப் பட்டார். ஆனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஸ்ரீமத்வர் தனது மேலான குணத்தினாலும் கல்வியாலும், சாத்வீக வாழ்க்கையினாலும், அன்பு, பக்தி முதலியவைகளினாலும் ஜனங்களின் மனதைக் கவர்ந்தனர். மாயாவாதத்தில் திருப்தி யுண்டாகாமல் சந்தேகமென்னும் இருளில் அகப்பட்டுக் கொண்டு வழி தெரியாமல் தத்தளித்த ஜனங்களுக்குத் தமது பக்தி மார்கத்தினால் ஸ்ரீமத்வர் ஒளியைத் தந்து சந்தோஷ முண்டாக்கினர்.

## பகவத்கீதா பாஷ்யம்

தென்னிந்தியாவைசுற்றிப் பிரயாணம் செய்த பின்பு ஸ்ரீமத்வர் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி யோசிக்க

லானார். பிரம்மசூத்திரத்திற்கு ஒரு பாஷ்யம் எழுத ஆசை கொண்டார். ஜீவன்வேறு ஈச்வரன் வேறு என்று ஜனங்களுக்கு உபதேசிக்க ஆரம்பித்தார். முதலில் பகவத்கீதைக்கு ஒரு பாஷ்யம் எழுதினார். இதற்கு முன்னமேயே அத்வைத சித்தாந்தத்தின் படி எழுதப்பட்டிருந்த வியாக்கியானங்களைக் கண்டித்துஎழுதினார். பிரம்மசூத்ர பாஷ்யம் எழுதுவதற்கு முன்னால் பதரிகாசிரமம் சென்று வியாசரை வழிபட்டு வரவேண்டுமென்னும் ஆசையுண்டாகவே குருவின் அனுமதி பெற்று பதரிக்குப் பிரயாணமானார்.

## பதரியாத்திரை

சகல சிஷ்யர்களுடன் காசியைக்கடந்து ஹிமோத் பர்வதம் வந்து சேர்ந்தார். ஸ்ரீமத்வர். அங்கே நரநாராயணர் கோவிலில் தங்கினார். அவ்விடத்திலிருந்து வேதவியாசர் வசித்துவரும் பதரிக்குப்போக ஆயத்தமானார். மௌனவிரதம் பூண்டு ஆகாரத்தை விட்டு, தவஞ்செய்ய ஆரம்பித்து சுமார் நாற்பத்தெட்டு நாட்களுக்குப் பிறகு ஒருநாள் இரவில் வேதவியாஸரே அவரை அழைத்ததாகவும் ஸ்ரீமத்வர் மறுநாள் உதயமானதும் புறப்பட்டுப்போனதாகவும் சொல்லப்படுகிறது. போகும்போது தன் சிஷ்யர்களிடம்'இவ்வுலகம் பொய்யல்ல. ஹரியே சிறந்து விளங்கும் கடவுள்.பொது நன்மைக்காகவே நான் சொல்லுவதெல்லாம். வியாஸரைப்பார்க்கப் போகிறேன்,' என்று எழுதித்தெரிவித்து விட்டுப்போனார். ஸ்ரீமத்வர் புறப்பட்டபோது சத்தியதீர்த்தர் மாத்திரம் கூடவே போகப் பிரயத்தனப்பட்டார். ஆனால் குருவைப் பின்தொடர முடியவில்லை. கடைசியில் திரும்பி வந்துவிட நேர்ந்தது. ஸ்ரீமத்வர் உண்மையான பதரிஎன்று சொல்லப்படும் வியாஸர் ஆசிரமத்தையடைந்து அவருக்கு நமஸ்காரம் செய்து சிஷ்யரானார். கொஞ்சகாலம் கழித்து பதரியை விட்

டுப் புறப்பட்டு தமது சிஷ்யர் சூழ உடுப்பிக்குப் பிரயாணமாயி னூர்.

ஹிமயமலைப் பிரதேசத்திலேயே பிரம்ம சூத்திர பாஷ்யத்தை தயார் செய்து விட்டார். ஸ்ரீமத் வேதவியாஸரிடமி ருந்து அறிந்த ஞானத்தினாலும், தபசின் மேன்மையாலும் சிறந்து விளங்கிய ஸ்ரீமத்வர் இத்தேசத்தில் த்வைத சித் தாந்தத்தை உபதேசிக்கலானூர். அக்காலத்தில் பலவித சித் தாந்தங்கள் நிலவிவந்தன. அவைகளை யெல்லாம் ஒவ்வொன் ருகக் கண்டித்து வைஷ்ணவமதத்தைப் போதித்தார். ஜீவ னும் ஈச்வரனும் ஒன்றல்ல. வித்தியாஸமானவையென தகுந்த காரணங்களால் எடுத்துக்காட்டி எல்லா பண்டிதர் களுடைய நன்மதிப்பையும் பெற்று பதரியிலிருந்து தெற்கு நோக்கிப் பிரயாணஞ் செய்தார். வங்காளம் முதலிய தேசங் களைக் கடந்து கோதாவரி தீரம் வந்து சேர்ந்தார்.

## சோபன்ன பட்டர்.

இங்கேதான் இரண்டு பெரிய கல்விமான்கள் ஸ்ரீ மத்வ ருடன் தர்க்கித்துப் பிறகு அவர் சித்தாந்தத்தின் உண்மையை உணர்ந்து, ஸ்ரீமத்வரின் சிஷ்யர்களாயினர். கோதாவரி தீரத் தில் அநேக பண்டிதர்கள் ஸ்ரீ மத்வருடன் வாக்குவாதம் செய்ய முன்வந்தனர். நியாய, வைசேஷிக சார்வாக முதலிய பகுதிகளைச் சார்ந்த பண்டிதர்களெல்லாம் ஸ்ரீ மத்வர் கல்வி யின் முன்னிற்க முடியாமல் தோற்று ஓடினர். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சோபன்ன பட்டர் என்னும் பேரறி வாளர் ஒருவர் இப் புதிய சந்நியாசியுடன் வாக்குவாதம் செய்ய முன்வந்தார். மத்தியஸ்தர்களை யெல்லாம் ஏற்பாடு செய்துக்கொண்டு இருவரும் சில விஷயங்களைப்பற்றி தர்க் கம் செய்யவே, கடைசியில் சோபன்ன பட்டர் அத்வைதத்

தில் ஸ்ரீ மத்வர் எடுத்துக்காட்டிய குற்றங் குறைகளை உணர்ந்து, ஜீவஈச்வர பேதத்தை ஒப்புக்கொண்டவராகி, ஸ்ரீ மத்வரின் சிஷ்யரானார்.

இவருடைய தைரியமே தைரியம்! உண்மை அறிய ஆசையுள்ள இவர், தாம் இதுகாறும் நம்பிவந்த அத்வைதம் நாஸ்திக மதமென்று உணர்ந்தவுடனே அக்காலத்தில் பிரம்ம சூத்திரத்திற்குச் சரியாக பொருள்கூறின ஸ்ரீ மத்வருடன் சேர்ந்துக்கொண்டது, அவர் தைரியத்தையும், அஞ்சா நெஞ்சத்தையும் காட்டுகிறது.

## ஸாமி சாஸ்திரி.

இவருக்குப் பின் ஸாமிசாஸ்திரி என்னும் பெயருடைய பெரிய பண்டிதர் ஒருவர் ஸ்ரீ மத்வரின் சிஷ்யராயினர். அவர் நரஹரி தீர்த்தரென்னும் பெயர் பூண்டு ஸ்ரீ மத்வருடன் புறப்பட்டு விட்டார். ஸாமிசாஸ்திரி பெரிய தனவந்தர். கலிங்கநாட்டில் ஒரு தனவந்தன் புத்திரர். ஸ்ரீ மத்வருடைய பாஷ்பத்தைக் கேட்டு, விரக்தியடைந்து சந்நியாசம் கொண்டார். ஸ்ரீ மத்வர் புறப்பட்டபோது தானும் கூடவே வருவதாக நரஹரி தீர்த்தர் சொல்லவே, அப்போது, அவரை சில காலம் கலிங்கநாட்டிலேயே இருந்துவிட்டு அங்கே மன்னன் பொக்கிஷத்திலிருந்த மூலராம, சீதா விக்கிரஹங்களைக் கொண்டுவருமாறு சொல்லிப்போந்தனர்.

## மூலராம சீதா விக்கிரஹங்கள்.

ஸ்ரீ மத்வர் சென்ற சில காலத்தில் நரஹரி தீர்த்தர் கலிங்கநாட்டின் ரக்ஷகராக நியமிக்கப் பெற்றார். மன்னன் இறந்துபோகவே, பட்டத்திற்கு வரவேண்டிய சிறு குழந்தைக்குப் பதிலாக நரஹரி தீர்த்தரே அந்த ராஜ்ஜியத்தை

பரிபாலித்து வரவேண்டி யிருந்தது. குழந்தைக்கு வயதுவந்த உடனே நரஹரி தீர்த்தர் ராஜ்ஜியத்தை அவ் வாலிபனிடம் ஒப்புவித்து விட்டு, தான் மூலராம, சீதா விக்கிரஹங்களைப் பெற்று குருவின் மொழியின்படி அவைகளை அவரிடம் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

சோபன்ன பட்டர் குருவைப் பின்தொடர்ந்துச் செல்ல வில்லை. அவர் ஆந்திர தேசங்களில் த்வைத சித்தாந்தத் தைப் பரப்ப ஏற்பாடு செய்தனர்.

ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் பேதமுண்டு, என்னும் புதிய ஞானம் உதயமாகவே ஜனங்கள் பக்தி மார்க்கத்தின்படி சன்மார்க்க வாழ்வுவாழ ஆரம்பித்தனர். ஜீவனுக்கும் ஈச் வரனுக்கும் ஒருவித சம்மந்த மிருப்பினும், வித்தியாசமுள்ள வையென உபதேசித்த ஸ்ரீ மத்வர் 'எல்லாம் ஒன்றே' 'நானே அது,' என்னும் கொள்கை தவறென்பதை உலகிற்குக் காண் பித்து விட்டார்.

## ஸ்ரீ கிருஷ்ண விக்கிரஹம்.

உடுப்பிக்குத் திரும்பிவந்து தன் குருவை த்வைத சித் தாந்தத்தை ஒத்துக்கொள்ளும்படிச் செய்தார். உடுப்பியில் ஒரு நாள் மிகவும் முக்கியமான ஒரு விஷயம் நடந்தது. ஸ்ரீ மத் வர் காலையில் எழுந்து சமுத்திர ஸ்நானம் செய்யச் சென் றார். செல்லும்போதே த்வாதசஸ்தோத்திரத்தை பாடிக் கொண்டே நடந்தார். அப்போது அவர்மனம் ஸ்ரீ கிருஷ் ணரை நாடி, பக்தியின் மிகுதியால் அவரோடு கலந்து நின்ற தனால் தாராளமாக சொல்நயம், பொருள் நயங்களில் மிக்க உயர்ந்த எண்ணங்களை உண்டாக்கும் செய்யுட்கள் அவர் வாயினின்றும் வந்தன. சிறிது நேரத்திற்குள் சுமார் ஐந்து அத்தியாயங்களைக் கவனம் செய்துவிட்டார். சமுத்திரக்

கரையையடைந்து ஸ்நானம் முடித்துக்கொண்டு நிஷ்டையில் உட்கார்ந்தார். அப்போதுகூட அவர் மனம் ஸ்ரீ கிருஷ்ணரிடம் லயித்துநின்றது. நிஷ்டைமுடிந்து கண்திறந்து பார்க்கவும், கடலில் ஒரு சிறு கப்பல் பெருங்காற்றினால் அலைக்கப்பட்டு, இப்படியும் அப்படியும் திரும்பி, அவஸ்தைப் படுவதைப் பார்க்கவே, தன் காவிவஸ்திரத்தின் ஒரு நுனியை கையில் எடுத்து, கப்பலைநோக்கி, 'இப்படிவா' என்று சொல்லும் விதமாக, சைகைசெய்தார். உடனே காற்று திரும்பி அடிக்கவும், கப்பல் கரைவந்து சேர்ந்தது. கப்பற்காரர்களும், மாலுமிகளும், சந்தோஷ மிகுதியால், கரையில்வந்து ஸ்ரீ மத்வருக்கு நமஸ்கரித்து நின்றனர். கப்பல் தலைவன் தன்னிடமிருந்து ஏதாவது நன்றியறிதலுக்காக சந்யாசி வாங்கிக்கொள்ள வேண்டுமென்று வேண்ட, ஸ்ரீ மதவர், பொருளை மதித்தவரல்ல வாதலால், சில கோபிச் சந்தனக் கட்டிகளை வாங்கிக்கொள்வதாகச் சொன்னார். உடனே கப்பல் தலைவன் பெரிய கட்டிகளுள் சிலவற்றை எடுத்து ஸ்ரீ மத்வர்முன் கொண்டுவந்து வைத்தான். ஒரு பெரிய கட்டியை ஸ்ரீ மத்வர் மடத்திற்கு அனுப்பிவிட்டுத் தானும் சென்றார். வழியில் கட்டி உடைந்து, அதிலிருந்த கிருஷ்ண விக்கிரஹம் ஒன்று வெளியாயது. கையில் ஒரு மத்தை ஏந்தின பாலகிருஷ்ண விக்கிரஹம் கண்டவர் மனதைக் கவரும்படி அவ்வளவு அழகுடன் விளங்கியது.

ஸ்ரீ கிருஷ்ண விக்கிரஹத்தைப் பார்த்தஉடனே ஸ்ரீ மத்வர் தன்னையறியாமலே கடவுளைத் துதிக்க ஆரம்பித்து, த்வாதச ஸ்தோத்திரம் என்று சொல்லப்படும் ஸ்தோத்திரங்களை 6 முதல் 12-வது அத்தியாயம் வரையில் பாடித்துதித்தார்.

விக்கிரஹத்தை உடுப்பிக்குக் கொண்டுவந்தார்கள். மத்வ சரோவரத்தில், சுத்தி செய்யப்பட்ட பிறகு அது முன்னிலும் பதின்மடங்கு காந்தியுடன் விளங்கியது. சுத்தி செய்யப்பட்ட விக்கிரஹத்தை மடத்திற்குக் கொண்டுபோகுமாறு ஒருவன் பிரயத்தினப்பட்டான். அவனால் முடியவில்லை. பிறகு பலர் பிரயத்தினப்பட்டும் பயனில்லை. சுமார் முப்பது பேராலும் அதை அசைக்க முடியவில்லை. ஸ்ரீ மத்வர் தானே விக்கிரஹத்தை ஏந்திக்கொண்டு மடம் சென்று, அதை பிரதிஷ்டைசெய்து, உடனே ஒரு கோயிலும் கட்டினார். அதன் பூஜைக்காக எட்டு மடங்களை ஏற்படுத்தி பூஜை தவறாமல் கிரமப்படி நடக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். ஸ்ரீ மத்வர் தமது வாழ்நாள் முழுவதும் தாமே ஸ்ரீ கிருஷ்ணர் பூஜை செய்துவந்தார். அவருக்குப் பிறகு இந்த எட்டு மடங்களும் ஏற்பாடாக பூஜையை நடத்தி வருகின்றன. ஸ்ரீ மதவர் யாகத்தில் ஜீவவதை செய்வது மதிஈனமெனக் கொண்டு ஜீவவதையை நீக்கி யாகம்செய்ய ஏற்பாடு செய்தார். இது இவருடைய ஜீவகாருண்யத்தைக் காட்டுகின்றதல்லவா ?

ஸ்ரீமத்வர் பதரிகாசிரமம் செல்ல மறுபடியும் ஆசை கொண்டார். சில சிஷ்யர்களுடன் புறப்பட்டு வழியில் நடந்த பலவித இடையூறுகளை நீக்கிக்கொண்டே பதரியை யடைந்தார். மத்வவிஜயத்தில் ஸ்ரீமத்வரும் அவரது சிஷ்யர்களும் செய்த இந்த யாத்திரையைப்பற்றி மிகவும் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

எவ்வாறு ஆசாரியார் திருடர் கூட்டங்களினின்றும் தப்பினாரென்றும், ஆறுகளைக்கடந்தாரென்றும், அக்கிரந்தத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரு சமயம் மஹாராஷ்டிர தேசத்தில் அரசாண்டுவந்த அரசன் ஸ்ரீமத்

வரையும் அவர் சிஷ்யர்களையும் வேலை செய்யச்சொன்னதும், ஸ்ரீமத்வர் எவ்வாறு அப்போது நடந்து கொண்டாரென்பதும், ஒரு மகம்மதிய அரசனிடம் எவ்வாறு பாரசீகபாஷையில் பேசினாரென்பதும் மத்வவிஜயத்தில் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றது.

வியாசருடன் சிலகாலம் இருந்துவிட்டு ஸ்ரீமத்வர் திரும்பி பதரியிலிருந்து உடுப்பிக்குப் பிரயாணமானார். வரும்போது எட்டு சாளக்கிராமங்களையும் வேதவியாஸரிடமிருந்து வாங்கி வந்தார். மகாபாரதத்தின் தாத்பர்யநிர்ணயம் என்னும் கிரந்த மொன்றை எழுதிமுடித்தார். உடுப்பிக்கு வரும்போது பல முக்கிய இடங்களில் தங்கி தமது த்வைதத்தை ஜனங்களுக்கு எடுத்துக்கூறி பக்திமார்க்கத்தை போதித்து வந்தார். காசியில் பலபண்டிதர்களுடன் தர்க்கம் செய்து மாயாவாதத்தின் குறைகளை எடுத்துக் காட்டினார். இந்திர்புரி என்னும் பெரியபண்டிதர் அங்கே அவருடன் தர்க்கம் செய்து தோல்வியடைந்தார். இவ்வாறு பலவிடங்களிலும் ஜயமடைந்து கடைசியில் உடுப்பிக்கு வந்து சேர்ந்தார்.

ஸ்ரீமத்வர் தமது த்வைத சிந்தாந்தத்தை உபதேசித்த போது இத்தேசத்தில் 21 சித்தாந்தங்கள் நிலவியிருந்தன. இவைகளில் அத்வைத சித்தாந்தம்தான் முக்கியமானது. இதை ஸ்ரீமத்வர் எல்லா விதமாகவும் கண்டித்து, சுத்த அத்வைதமென்று இல்லை யெனக் கற்பித்தார். உலகமேபொய் எல்லாம் பொய், மாயை, என்று சொல்லுவது, நாஸ்திக மதத்தை விடக்கொடியதென நினைத்தவராய் அத்வைதத்தின் மீது தமது முழுநோக்கத்தையும் செலுத்தினார்.

இப்படிப்பட்ட கல்விமான் அத்வைதத்தைக் கண்டிக்கவே, சிருங்கேரிமடத்து சங்கராசாரியாருக்கு வருத்தம்

உண்டாயிற்று. அவருக்குப் பின்வந்த பத்மதீர்த்தருக்கும் ஸ்ரீமத்வர்மீது பகை உண்டாயிற்று. ஒவ்வொரு நாளும் பெரிய பெரிய பண்டிதர்கள் த்வைத சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டதாக சங்கதி வந்துக்கொண்டே இருந்தது. இனி சும்மா இருக்கலாகாதெனதீர்மானித்துக் கொண்டு சிருங்கேரிமடத்து பத்மதீர்த்தரும் அவரது சிஷ்யர்களும் ஒரு சபை கூட்டி யோசித்தனர். எவ்வாறு புதிதாகப் புறப்பட்ட 'தத்வவாதி' யாகிய ஸ்ரீமத்வரிடமிருந்து அத்வைதத்தைக் காப்பதென யோசித்தனர். சிலர் கெட்ட யோசனைகளையெல்லாம் கூறினர். சிலர் பத்மதீர்த்தரை பரிகாசவார்த்தைகளால் கோபப் படுத்தி கெட்ட வழிகளில் பிரவேசித்து த்வைதத்தை அழிக்க யோசனை கூறினர். ஆனால், கடைசியில் எப்படியாவது புதிய சித்தாந்தம் தலையெடுக்க வொட்டாமல் செய்ய வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக இவர்கள் செய்ததாவது: தெருக்கோடிகளில் நின்று, புதிய த்வைத சித்தாந்தம் சாஸ்திரசம்மத மில்லாததென்று பிரசங்கம் செய்து த்வைதத்தை ஆதரித்த பிராம் மணர்களை ஜாதிபிரஷ்டம் செய்து பலவிதமாக ஹிம்சித்தனர். உலகத்தில் நிலவிவரும் பொய்எண்ணங்களையும் பொய் வழக்கங்களையும் நீக்குமாறு நல்ல உபதேசம்செய்ய வரும் ஒவ்வொரு பெரியோர்களும் கஷ்டப்படுவதுதான் வழக்கமாக இருக்கின்றது. தேசத்தில் நிலவும் நம்பிக்கைகளுக்கு மாறாக, புதிய விஷயங்களை ஒருவன் சொன்னால், அவனும், அவனைச் சார்ந்தவர்களும் பலவிதமாக ஹிம்சிக்கப்படுதலை கண்கூடாகப் பார்க்கின்றோமல்லவா ! சரித்திரத்தில் இவ்வித சம்பவங்கள் பலகிடக்கின்றன. ஆகையால் அத்வைதிகள், பக்திமார்க்கத்தைத்தழுவும் ஜனங்களை பலவிதமாக ஹிம்சிக்கத் தீர்மானித்தது ஆச்சரியமல்ல. ஸ்ரீமத்வருடன் தர்க்கித்து த்வைதத்தை

நாசஞ் செய்யவேண்டுமென்றும், கடைசியாக எப்படியாவது புதுமார்க்கத்தை நாசஞ்செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தார் பத்ம தீர்த்தரும், அவரது சிஷ்யர்களும்.

நினைத்தபடி அவ்வளவு சுலபமாக, புதிதாகக்கிளம்பி, எழுந்து, உயர்ந்து, வந்த பக்திமார்க்கத்தின் அலையை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆதலால் ஸ்ரீமத்வரின் புஸ்தகங்களைத்திருடி சமுத்திரத்தில் எறிந்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு, பத்மதீர்த்தருடைய ஆட்கள் ஆசாரியார் புஸ்தகங்களை யெல்லாம் திருடிக்கொண்டுபோய் விட்டார்கள். இப்படிச் செய்தது ஸ்ரீமத்வருக்கு நன்மையே விளைவித்தது. அக்காலத்தில் அங்கே அரசாண்டுவந்த ஜயசிம்மராஜன் உதவியால் புஸ்தகங்களை ஸ்ரீமத்வர் திரும்பவும் பத்மதீர்த்தரிடமிருந்து அடைந்தார். இதனால் என்ன விளங்குகின்றதென்றால் பக்திமார்க்கத்தின் அலையை அக்காலத்தில் எவராலும் தடுக்கமுடியவில்லை. தேசத்தில் மாயாவாதம் நிலவிவந்ததாலும், கல்வியிற் சிறந்த பெரியோர்களெல்லாம் ஸ்ரீமத்வர் சொன்ன விஷயங்களை யறிந்து, மாயையினின்றும் விடுபட்டு, பக்தியுடையவராகி சாத்வீக நெறியில் நின்றுவாழலாயினர்.

ஸ்ரீமத்வர் புஸ்தகங்கள் காணமற்போய், மறுபடியும் கிடைத்த உடனே ஒரு முக்கிய சம்பவம் நடந்தது. திருவிக்கிரம பண்டிதர் என்னும் பெரிய பண்டிதர் ஸ்ரீமத்வருடன் பதினைந்து நாட்கள் வரையில் தர்க்கித்து மாயாவாதத்தின் தன்மையை யறிந்து, உடனே த்வைத சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டார். இப்படிப்பட்ட பெரிய பண்டிதர் புதிய சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டுவிட்டாரென்னும் சமாசாரம் தேசமெங்கும் பரவவே, ஜனங்களுக்கு 'ஸ்ரீமத்வர் சித்தாந்தமும்

நிஜமாயிருக்கலாம்' என்னும் எண்ணம் தோன்றியது. ஹிந்து மததத்திற்கே அஸ்திவாரமாகவுள்ள வேதங்கள், உபநிஷத்துகள், பிரம்மசூத்திரம், முதலியவைகளின் உண்மையான கருத்தை அவர் ஜனங்களுக்கு எடுத்துக்கூறி, அக்காலத்தில் ஹிந்து சமூகத்தில் நிலவிவந்த கெடுதிகளைப்போக்கி, ஜனங்களை நல்ல சத்வகுணமிருந்த வாழ்க்கை வாழச்செய்தனர். உண்மை நெறியினின்றும் தவறி துன்மார்க்கத்தில் பிரவேசிப்பதற்கும், வீண் வாய்ச்சண்டை, சொல்சண்டை முதலியவைகளுக்குமே அக்காலத்தில் பெரும்பாலும் உபயோகப்பட்டு வந்த மாயாவாதத்தைவிட பக்திமார்க்கம் அதிக மேன்மையானதென ஜனங்கள் உணர்ந்தனர். உடனே பல்லாயிரக் கணக்காக எல்லோரும் ஆசாரியாரை யணுகி அவர் உபதேசம் பெற்று, ஜீவஈச்வரபேதத்தில் நம்பிக்கை கொண்டார்கள்.

இதற்குள்ளாக ஸ்ரீமத்வரின் தகப்பனாரும், தாயாரும் ஒருவர்பின் ஒருவராக பரமபதம் அடையவே, அவர் சகோதரர் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் செய்துவிட்டு, ஸ்ரீமத்வரை யணுகி சந்நியாசியாக அனுமதிகேட்டார். ஆனால் ஸ்ரீமத்வர் சாதுர்மாசத்திற்குப்பிறகு சந்நியாசங் கொள்ளலாமென்று சொல்லவே அவர் போய்விட்டார். சாதுர்மாசவிருதம் கழிந்த உடன், ஸ்ரீமத்வர் பாஜக க்ஷேத்திரஞ்சென்று, தன் சகோதரருக்குச்சந்நியாச ஆசிரமம் கொடுத்து, விஷ்ணு தீர்த்தரென்னும் பெயரிட்டார். இவர் இத்தேசமுழுவதும் யாத்திரைசெய்து, தபோபலத்தில் மிக்குவிளங்கினார்.

ஸ்ரீமத்வர் உலகில் செய்யவந்த காரியத்தை முடித்துவிட்டார். தன் சிஷ்யர்களுக்கு ஒருநாள் ஐதரேய உபநிஷத்தைப்பற்றி வியாக்கியானம் செய்துக் கொண்டிருக்கும்போது இவ்வுலகைவிட்டு நீங்கி பதரியில் வேதவியாஸருடன் போய்ச் சேர்ந்துகொண்டார்.

ஸ்ரீமத்வர் சரித்திரத்தைப்பற்றி யோசித்துப்பார்த்தால், சில நூற்றாண்டுகளுக்குமுன் இத்தேசத்தில் அத்வைத சித்தாந்தத்தின் காரணமாக பலவித தீமைகள் இருந்துவந்தனவென்பதும், அப்போது, ஸ்ரீமத்வர், ஜீவ ஈச்வரபேதத்தைப் பற்றி ஜனங்களுக்குச்சொல்லி, மாயாவாதத்தில் நம்பிய ஜனங்கள் அக்கிரமங்களைச் செய்யாமல் தடுத்து, அவர்களுக்கு உலகம் மாயையல்ல, மெய்யென்றும், நல்ல கர்மங்களினாலும்,சுத்த சாத்விக வாழ்க்கையாலும், பக்தியாலும் மனிதன் மேன்மையடையலாமென்றும் போதித்தார் என்பது விளங்குகின்றது.

Printed at The Noble Press, Madras S. E.